உ



பண்டாரவளை இறேக் மேல்பிரிவு

அருள்மிகு

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

பிரதம குருவின் பாரியார்

## திருமதி இராஜராஜேஸ்வரி

அவர்களின்

மறைவு குறித்து

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபதமடைந்த



# திருமதி இராஜராஜேஸ்வரி அவர்கள்

மலர்வு :
**2-6-1937**

உதிர்வு :
**23-5-1990**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவளை இறேக் மேல்பிரிவு
அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
பிரதம குருவின் பாரியார்

# திருமதி இராஜராஜேஸ்வரி

அவர்களின் மறைவு குறித்து

## அன்பு நண்பர்கள் அருளிய

# இரங்கற் பாக்கள்

வெண்பா

வருடம் பிரமோதூதம் வைகாசிதினம் ஒன்பது
புதவாரமும் கார்த்திகையும் கூடிய அமாவாசைத்திதி
தீர்க்கசுமங்கலி இராஜராஜேஸ்வரி எனும் திருநாம
மங்கை திருக்கையிலை சேர்ந்த நன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவல்

சைவம் தழைத்தோங்க அரும்பணியாற்றியோன் ஆறுமுகநாவலன் வாழ்ந்த புண்ணியபூமி எனும் யாழ்ப்பாண வண்ணார்பண்ணை தன்னில் வேதநெறிகாத்த உத்தம அந்தணர் மரபில் வந்த மறையோன் இரத்தின ஐயர் எனும் உத்தமனுக்கும் அன்பும் பண்பும் நிறைந்த உத்தமி யோகாம்பாளுக்கும் சிரேஷ்ட புத்திரியாய் **இராஜராஜேஸ்வரி** எனும் மங்கை வடிவாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் திருவருளால் அவதரித்தார்.

குறிஞ்சி நாட்டுக்குமரனின் திருதொண்டாற்றுமுகமாக பண்டாரவளை எனும் நகரிலுள்ள சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் குடும்பம் வாழத்தொடங்கியது.

பருவகாலங்கள் உருண்டோடின மங்கைக்கு இளைய சகோதர-ராய் பத்பநாபசர்மா, நாகேந்திரசர்மா, பரமேஸ்வரன் எனும் மூவருடன் சகோதரிகளாய் சீதாலெட்சுமி, திலகவதி, கல்யாணி வசந்தி ஆகியோரும் அவதரித்தனர்.

இப்படியாக வளர்ந்து வரும் காலத்தில் இராஜராஜேஸ்வரி திருமணப் பருவமெய்தினாள். தந்தையும் தாய்வழி மாமன்-மார்கள் வரன்தேடி நாகதம்பிரான் புகழ்பாடும் அனலைதீவு எனும் நல் பூமியை வந்தடைந்தார். நாகேஸ்வரன் கிருபையால் நடராஜக்குருக்கள் செல்லம்மா தம்பதிகளின் திருமகனார் **பரமசாமிசர்மாவை** மணமகனாகத் தேர்ந்தெடுத்தனர்.

நாகேஸ்வரசர்மா, சுந்தரசர்மா, மகேஸ்வரசர்மா, பாலசுப்பிர-மணியசர்மா, சதாசிவசர்மா, தாமோதரசர்மா அகிலேஸ்வரசர்மா கணேசராசசர்மா, சிறீதரசர்மா, ஜீவதாம்பாள், ராசாத்தி ஆகியோர் புடைசூழ திருமணக் கோலம் பூண்டார்.

இல்லறமும் நல்லறமும் செவ்வனே நடைபெற்றன. இறையருளால் திருமங்கை ஆண்மகனை ஈன்றாள் காலனின் கொடுமையால் பெற்றமகனை சீராட்ட முடியவில்லை கவலை துன்பம் நீங்கும் பொருட்டு புதிய ஊராம் புதுநாகவத்தை மேற்பிரிவு எனும் இயற்கை அழகு கொழிக்கும் நெடிதுயர்ந்த குன்றின் உச்சியில் திருமுருகன் குடியிருக்கும் ஆலயத்தை வந்தடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகள் இறைவனுடைய தொண்டாற்றிவருவதல்லாமல் உறவினர்கள், சகோதரர்கள் முதலியோருக்கும் வாழ்க்கை வழிகளையும் இல்லறங்களையும் அமைக்க தம்மால் இயன்ற உதவிகளையும் புரிந்துவந்தனர்.

புதுநாகவத்தை வாழ் மக்களின் இதயங்களில் அன்பும் பண்பும் நிறைந்த அக்காவாய் இலங்கையிலுள்ளோர்க்கு கருணை நிறைந்த பிராமணோத்தமியாய் மூன்று பத்தாண்டுகள் நிறைவுற வாழ்ந்து வரும் நாளில் வாழும் நாள் கணிதம் முடிந்ததென

பிரமோதூத வருடம் வைகாசித்திங்கள் ஒன்பதாம் நாள் புதன்கிழமை இரவு ஐபிரண்டு மணியளவில் இறைவன் தன் பாதம் சேர்வித்தான்.

## கணவன் புலம்பல்

வற்றாத அன்பின் ஊற்றே! மலர்ந்தெனது மணவரங்கில் முற்றாக மறையா என்றன் முழுமணிக்குன்றே! முன்னே சற்றே னும் துன்பம் நானே தளர்ந்தினிச்சகியேன் சென்றாய் பொன்-போன்ற நின் தாமரைமுகம் புவியில் காண்பதெப்போ

## சகோதரர் புலம்பல்

பொங்கிய பூரிப்போடு உந்தன் மங்கள வாசல் வந்தால் தங்கியே செல்வாய்யென்று மிக்க விருந்தோம்பல் ஈந்து சங்கை மிக்கான அன்புச்சோதரி பிரிவால் வாடும் இங்கவள் மறைந்த செய்திகேட்டு இதயமே எரியுதந்தோ.

## மைத்துனர் புலம்பல்

மைத்துனி என்றே உந்தன் மங்கல வீடுவந்தால்
மெத்தவே மகிழ்ச்சியோடு இனிய நல்வார்த்தை கூறி பக்தியாய்
பரவசமாய் பலவகை கதை பகன்று உத்தம மச்சியும்மை
உலகினில் நாம் காண்பதெப்போ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள், மருமக்கள் புலம்பல்

பெற்றெடுத்த தாயைவிடப் பேரன்பு கொண்டெம்மைப்
பேணிநின்ற
நற்றவத்து ராஜமக்காவை மறப்போமோ நாளெல்லாம்.
கதைகள் சொல்லிக் கற்றுயர வழிவகுத்தாய் எம்மை
கண்ணியமாய் வாழ்ந்து வந்தாய் சிரஞ்சீவிமேவி
அற்றவர்க்கும் அலந்தவர்க்கும் அருள்புரியும் முருகனடி
அடைந்தே விட்டாய்.

## ஊர் பொதுமக்கள் புலம்பல்

புதுநாகவத்தைத் தோட்ட முருகன்மணி பார்தம் மக்கள் மகிழ
வொலிக்க பத்தாவது குடமுழுக்கு ஞாபகார்த்த விழாவை
ஊரார் கண்டுகளிக்குமுன்பே
சீரார் புகழும் ஐயர் அக்கா
சிறந்தே சென்றாய் எமைப்பிரிந்து
சிந்தை சிதறி சோர்வுற்றோம்
சோகம் உருவாய்த் திகழ்கின்றோம்.
ஐயும் தொடர்ந்து விழியும் சொருகியறிவழிந்து
மெய்யும் பொய்யாகிவிடுகின்ற போதொன்று வேண்டுவொன்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டும்
கையுந்தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவுங் கற்பியுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமன் அச்சகம், பண்டாரவளை.

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12-7-90